بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 30/08/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பில் (ஹஸ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்ட) இஃப்க் சம்பவம் பற்றிய குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَاِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَلَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஜெர்மனி மாநாட்டிற்கு முந்தைய குத்பாக்களில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக கூறப்பட்டு வந்தது. அதில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்ட சம்பவமும் கூறப்பட்டது. இதைக் **குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

இறைவன் தன்னுடைய பண்புகளில் வைத்துள்ள விஷயம் என்னவென்றால், தவ்பா இஸ்திக்ஃபார், துஆ மற்றும் சதகா ஆகியவற்றின் காரணமாக தண்டனை குறித்த முன்னறிவிப்பை (நிறைவேற்றுவதைத்) தவிர்த்து விடுகின்றான். இவ்வாறே மனிதனுக்கும் அவன் இதே நல்லொழுக்கத்தைக் கற்றுக் கொடுத்துள்ளான். திருக்குர்ஆன் ஹதீஸ் ஆகியவற்றிலிருந்து நிருபணமாவது போல், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தொடர்பாக நிகழ்ந்த சம்பவத்திற்கு எதிராக முனாஃபிக்கள் தீய நோக்கத்துடன் மட்டுமே அவதூறு சுமத்தினார்கள். இதை எடுத்துரைத்ததில் சில அப்பாவி சஹாபிகளும் இணைந்து விட்டனர். (அவர்களுள்) ஒரு சஹாபி எப்படிப்பட்டவர் என்றால் அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிலிருந்து இரு வேளை உணவு உண்டு வந்தார். அவர் செய்த தவறின் காரணமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தண்டனையளிக்கும் விதமாக சத்தியம் செய்து உறுதியெடுத்துக் கொண்டார்கள். இந்த முறையற்ற செயலுக்கு தண்டனையாக அவருக்கு ஒருபோதும் உணவு கொடுக்க மாட்டேன் என்று கூறினார்கள். அப்போது,

وَلۡیَعۡفُوۡا وَلۡیَصۡفَحُوۡا ؕ اَلَا تُحِبُّوۡنَ اَنۡ یَّغۡفِرَ اللّٰہُ لَکُمۡ ؕ وَاللّٰہُ غَفُوۡرٌ رَّحِیۡمٌ

எனும் வசனம் இறங்கியது. (அதாவது, அவர்கள் மன்னித்து பொறுத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் உங்கள் குறைகளை மன்னிப்பதை நீங்கள் விரும்பவில்லையா? அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணைகாட்டுபவனுமாவான்.)

ஆகவே, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது இந்த உறுதிமொழியை முறித்துக் கொண்டு வழக்கம்போல் உணவு கொடுக்க ஆரம்பித்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இதனடிப்படையில் இஸ்லாமிய ஒழுக்கத்தில் உள்ள விஷயம் என்னவென்றால், தண்டனையளிக்கும் விதமாக ஒருவர் உறுதியெடுத்துக் கொண்டால் அதை முறிப்பது நல்லொழுக்கத்தைச் சாரும். உதாரணமாக, ஒருவர் தம் பணியாளர் தொடர்பாக அவருக்கு நிச்சயமாக 50 செருப்படிகள் கொடுப்பேன் என்று சத்தியம் செய்கிறார். அந்த பணியாளருடைய தவ்பா மற்றும் மன்றாடுதல் ஆகியவற்றின் காரணமாக (அவரை) மன்னிப்பது இஸ்லாமிய நடைமுறையாகும். அதன் மூலமாக இறைவனுடைய பண்பை தமாதாக்கிக் கொள்வதாகும். ஆனால் வாக்குறுதியை தாமதப்படுத்துவது ஆகுமானதல்ல. வாக்குறுதி மீறுவதால் கேள்வி கேட்கப்படும். ஆனால் தண்டனை பற்றிய உறுதிமொழியை விட்டு விடுவதால் கேட்கப்படாது!

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்ட சம்பவத்தை புகாரியின் அறிவிப்பின் ஒளியில் எடுத்துரைத்தவாறு எழுதுகிறார்கள்:

இந்த விவகாரத்தில் (புகாரியின்) இந்த அறிவிப்பு அனைத்து அறிவிப்புகளை விடவும் விளக்கமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் உள்ளது. இந்த அறிவிப்பில் இருந்து பெருமானார் (ஸல்) அவர்களின் குடும்ப வாழ்வின் மீதும் எப்படிப்பட்ட அகப்பார்வையின் ஒளி விழுகிறது என்றால் அதை எந்த ஒரு வாழ்க்கை வரலாற்று ஆசிரியராலும் கண்டும் காணாமல் இருக்க முடியாது. உறுதித் தன்மையை பொறுத்தவரையிலும் இந்த அறிவிப்பு எப்படிப்பட்ட உயரிய அந்தஸ்தைக் கொண்டுள்ளது என்றால் அதில் எவ்வித ஐயத்திற்கும் சந்தேகத்திற்கும் இடம் இருப்பதாக கருத முடியாது. இப்பொழுது சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், முனாஃபிக்கள் சார்பாக எழுப்பப்பட்ட இந்த குழப்பம் எந்த அளவு பயங்கரமானதாக இருந்தது என்பதாகும்! இதில் பரிசுத்தமான, மிகவும் மேலான இறையச்சத்தைக் கொண்ட, தீமைகளிலிருந்து விலகி இருந்த ஒரு பெண்ணுடைய கற்பின் மீது தாக்குதல் தொடுப்பது மட்டுமே நோக்கமாக இருக்கவில்லை. மாறாக இதிலிருந்த மிகப்பெரும் நோக்கம் என்னவென்றால், மறைமுகமான முறையில் தூய இஸ்லாத்தின் தோற்றுநரின் கண்ணியத்தை சீர்குலைப்பதும், இஸ்லாமிய சமூகத்தில் ஒரு பயங்கரமான அதிர்ச்சியை ஏற்படுத்துவதும் ஆகும். முனாஃபிக்கள் இந்த அசுத்தமான, கீழ்த்தரமான பிரச்சாரத்தை எந்த அளவு சர்ச்சைக்குள்ளாக்கினார்கள் என்றால் சில அப்பாவி உண்மை முஸ்லிம்களும் அவர்களின் சூழ்ச்சி வலையில் சிக்கி தடுமாற்றம் கண்டுவிட்டார்கள். அம்மக்களுள் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி), ஹம்னா பின்த் ஜஹ்ஷ் மற்றும் மிஸ்தஹ் பின் உஸாஸா ஆகியோரின் பெயர்கள் குறிப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆனால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் பெருந்தன்மை எவ்வாறானதாக இருந்தது என்றால், அவர்கள் இவ்வனைவரையும் மன்னித்து விட்டார்கள். தம் உள்ளத்தில் இம்மக்கள் தொடர்பாக எவ்வித கோபத்தையும் வைத்திருக்கவில்லை.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தியதற்கான காரணத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அசல் நோக்கம் என்னவாக இருந்தது என்று நாம் பார்க்க வேண்டும்! (குற்றம் சுமத்திய) அந்த மக்களுக்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஏதாவது பகை இருந்தது என்பது காரணமாக இருக்க முடியாது. இந்தக் குற்றச்சாட்டைக் குறித்து இரண்டு காரணங்கள்தான் இருக்க முடியும்! ஒன்று, நவூதுபில்லாஹ்! இந்த குற்றச்சாட்டு உண்மையானதாக இருக்க வேண்டும். இதை எந்த ஒரு நம்பிக்கையாளரும் ஒரு கணம்கூட ஒப்புக்கொள்ள மாட்டார். குறிப்பாக, அல்லாஹ் அர்ஷில் இருந்து இந்த

அசுத்தமான சிந்தனையை மறுத்திருக்கும் போது! இரண்டாவது காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்துவதால் வேறு சில நபர்களுக்கு நஷ்டம் ஏற்படுத்துவது நோக்கமாக இருந்திருக்கும்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்துவதால் இரு நபர்களை பழி தீர்க்க முடியும் என்பது சாதாரணமாக சிந்தித்தாலே தெரிய முடிகிறது. ஒருவர், பெருமானார் (ஸல்) அவர்கள் ஆவார்கள். இன்னொருவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒருவருடைய மனைவியாக இருந்தார்கள்; இன்னொருவருடைய மகளாக இருந்தார்கள். இந்த இரு நபர்களும் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்களுக்கு அவப்பெயர் ஏற்படுவதால் அரசியல் ரீதியாகவும், பகைமை ரீதியாகவும் சிலருக்கு லாபம் கிடைக்க வாய்ப்பிருந்தது. இல்லை என்றால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதில் எந்த ஒரு நபருக்கும் ஆர்வம் இருந்திருக்க முடியாது.

பெருமானார் (ஸல்) அவர்களுடைய அந்தஸ்து எப்படிப்பட்டது என்றால் அவதூறு சுமத்தியவர்களால் அதை ஒருபோதும் பறிக்க முடியாது. பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பிறகும் கூட தம் நோக்கங்களை தம்மால் பூர்த்தி செய்ய இயலாமல் போய்விடுமோ என்ற அச்சம்தான் அவர்களுக்கு இருந்தது. அன்னாருக்குப் பிறகு கலீஃபாவாக ஆவதற்கு யாராவது தகுதி படைத்தவராக இருக்கிறார் என்றால் அது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்தான் என்பதை அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே இந்த அபாயத்தை உணர்ந்து கொண்டு அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தினார்கள். அதன் மூலமாக பெருமானார் (ஸல்) அவர்களின் பார்வையில் இருந்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் நன்மதிப்பு சரிந்து விட வேண்டும் என்றும், அதன்மூலமாக முஸ்லிம்களிடத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இருக்கும் அந்தஸ்து இல்லாமல் போய்விட வேண்டும் என்றும், இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக ஆவதற்கான வாசல் முற்றிலும் மூடப்பட்டு விட வேண்டும் என்றும் விரும்பினார்கள்.

வரலாற்றிலிருந்து நிரூபணமாவது என்னவென்றால், மதீனாவில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் என்ற அரேபியாவின் இரு கோத்திரங்கள் இருந்தன. அவர்கள் தம் சண்டை சச்சரவு ஆகியவற்றை விட்டு பரஸ்பர சமரசத்திற்கு உடன்பட்டார்கள். யாரேனும் ஒரு நபரை தம் அரசாக ஆக்கிக் கொள்ளலாம் என்று முடிவுவெடுத்தனர். ஆகவே அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் என்பவனை மதீனாவின் அரசனாக ஆக்க தீர்மானித்தனர். அந்த காலகட்டத்தில்தான் மதீனாவைச் சார்ந்த சில ஹாஜிகள் மக்காவிலிருந்து திரும்பி வந்தார்கள். இறுதி காலத்தின் நபி மக்காவில் தோன்றி விட்டார்; நாங்கள் அவரிடம் பைஅத் செய்து வந்துள்ளோம் என்று கூறினார்கள். சில நாட்களுக்குப் பிறகு இன்னும் சில மக்களும் மக்காவுக்கு சென்று அன்னாரிடம் பைஅத் செய்தார்கள். தாங்கள் எங்களுடைய தர்பிய்யத் மற்றும் தப்லீகிற்காக ஏதேனும் ஓர் ஆசிரியரை எங்களுடன் அனுப்பி வையுங்கள் என்று அவர்கள் அன்னாரிடம் கோரிக்கை வைத்தனர். ஆகவே அன்னார் ஒரு சஹாபியை முபல்லிக் ஆக அனுப்பி வைத்தார்கள். (பிறகு) மதீனாவில் பல மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். அந்நாட்களில் மக்காவில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் அன்னாருடைய சஹாபிகளுக்கும் பெரும் துன்பங்கள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஆகவே மதீனாவாசிகள் அன்னாரிடம், தாங்கள் மதீனாவுக்கு வருகை தாருங்கள் என்று கோரிக்கை வைத்தனர். ஆகவே அன்னார் ஸஹாபிகளுடன் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். அப்துல்லாஹ் பின் உபை

பின் சலூலுக்காக கிரீடம் ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அது பயனற்றதாக ஆகி விட்டது. ஏனென்றால் மதீனாவாசிகளுக்கு ஈருலகின் அரசர் கிடைத்துவிட்டபோது அவர்களுக்கு வேறு எந்த அரசரின் தேவை இருக்கிறது?

தான் அரசன் ஆவதற்கான எல்லா சாத்தியங்களும் வீணாகிப் போவதை அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் கண்டபோது அவனுக்கு கடும் கோபம் உண்டாயிற்று. அவன் வெளிப்படையில் முஸ்லிம்களுடன் இணைந்து விட்டிருந்தான்! ஆனால் எப்பொழுதும் இஸ்லாத்தில் பிளவை ஏற்படுத்திக் கொண்டிருந்தான். அவன் இப்போது வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருந்தான். ஆகவே இப்போது அவனது உள்ளத்தில் ஏதேனும் விருப்பம் இருந்தது என்றால் அது ஹஸ்ரத் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வஃபாத்தான பிறகு, தான் மதீனாவின் அரசனாக ஆக வேண்டும் என்பதே ஆகும். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு முஸ்லிம்களின் பார்வை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பக்கமே இருப்பதைக் கண்டு அவர்களுக்கு அவப்பெயர் ஏற்படுத்திவிட வேண்டும்; மக்களின் பார்வையிலும் பெருமானார் (ஸல்) அவர்களின் பார்வையிலும் அவர்களை விழச் செய்து விட வேண்டும்; அதிலேயே தனக்கு நன்மை இருப்பதாக அவன் கருதினான். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒரு போரில் பின் தங்கிய சம்பவம் நிகழ்ந்த போது அவனுக்கு இந்தத் தீய எண்ணத்தை முழுமை செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தத் தீயவன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது மிகவும் அசுத்தமான அவதூறை கற்பித்தான்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்ட சம்பவத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத்துடன் தொடர்புபடுத்தி கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் மேற்கொண்டு எழுதுகிறார்கள்: சூரா நூருடைய ஆரம்பம் முதல் இறுதி வரை ஒரே கருத்துதான் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. முதலில், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது சுமத்தப்பட்ட அவதூறைப் பற்றிய குறிப்பு உள்ளது. அல்லாஹ் இந்த அவதூறு குறித்து எடுத்துரைத்த பிறகு உடனடியாக கிலாஃபத்தை பற்றி எடுத்துக் கூறியுள்ளான். கிலாஃபத் என்பது அரசாட்சி கிடையாது. அது இறை ஒளியை நிலை பெறச் செய்வதற்கான ஒரு வழிமுறையாகும். ஆகவே அதை நிலைபெறச் செய்வதை அல்லாஹ் தன் கையில் வைத்துள்ளான். ஆகவே அவன் அந்த ஒளியை கண்டிப்பாக நிலைபெறச் செய்வான். எவரை அவன் விரும்புகிறானோ அவரை அவன் கலீஃபாவாக ஆக்குவான். எந்த அளவுக்கு என்றால், முஸ்லிம்களிடத்தில் இருந்து ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களை கிலாஃபத்தில் அமர்த்தி இந்த ஒளியின் காலத்தை நீடிக்க செய்வான் என்று அவன் வாக்குறுதி கொடுத்துள்ளான். நீங்கள் அவதூறு சுமத்த விரும்புகிறீர்கள் என்றால் சுமத்திக் கொள்ளுங்கள்! உங்களால் கிலாஃபத்தை அழிக்கவும் முடியாது; கிலாஃபத்தில் அமர்வதிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விலக்கவும் முடியாது. ஏனென்றால் கிலாஃபத் ஓர் ஒளியாகும். அது அல்லாஹ்வுடைய ஒளியை வெளிப்படுத்துவதற்குரிய ஒரு வழிமுறையாகும். மனிதன் தன் திட்டங்களால் அதை எவ்வாறு அணைக்க முடியும்?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “நபிமார்களின் நிலையும் இவ்வாறுதான் உள்ளது! இறைவன் ஒரு விஷயத்தைக் குறித்து அவர்களுக்கு தகவல் தெரிவிக்கும் போது அவர்கள் அதை விட்டு விலகி விடுகிறார்கள் அல்லது அதை மேற்கொள்கிறார்கள். பாருங்கள்! ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்ட சம்பவத்தில் முதலில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எவ்வித தகவலும் கொடுக்கப்படவில்லை. எந்த அளவுக்கென்றால்,

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தம் தந்தையின் வீட்டுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது. நீங்கள் (தவறு) செய்திருந்தால் தவ்பா செய்யுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்களும் கூறினார்கள். இந்த சம்பவங்களை காணும்போது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவு நிம்மதியற்ற நிலை இருந்தது என்பது தெளிவாக தெரிகிறது. ஆனால் ஒரு நேரம் வரை இந்த இரகசியம் அன்னார் மீது வெளிப்படவில்லை. ஆனால் இறைவன் தன் வஹீ மூலமாக (ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை) குற்றமற்றவராக ஆக்கியவாறு,

اَلْخَبِيْثٰتُ لِلْخَبِيْثِيْنَ وَالْخَبِيْثُوْنَ لِلْخَبِيْثٰتِ ۚ وَالطَّيِّبٰتُ لِلطَّيِّبِيْنَ وَالطَّيِّبُوْنَ لِلطَّيِّبٰتِ ۚ

(கெட்ட பெண்கள், கெட்ட ஆண்களுக்குத் தகுந்தவர் ஆவர். கெட்ட ஆண்கள், கெட்ட பெண்களுக்குத் தகுந்தவர் ஆவர். நல்ல பெண்கள், நல்ல ஆண்களுக்குத் தகுந்தவர் ஆவர். நல்ல ஆண்கள், நல்ல பெண்களுக்குத் தகுந்தவர் ஆவர்.) என்று கூறிய போது, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த அவதூறுடைய உண்மைத்தன்மை தெரியவந்தது. இதனால் பெருமானார் (ஸல்) அவர்களின் மகத்துவத்தில் ஏதேனும் வேறுபாடு ஏற்பட்டதா என்ன? ஒருபோதும் கிடையாது! எவர் இவ்வாறு எண்ணவும் செய்வாரோ அவர் அநீதியாளரும் இறைவனுக்கு அஞ்சாதவரும் ஆவார். இது நிராகரிப்பு வரை சென்றடைகிறது. பெருமானார் (ஸல்) அவர்களும் (பிற) நபிமார்களும் தாம் எல்லாவற்றையும் அறிந்தவர்கள் என்று ஒருபோதும் வாதித்தது கிடையாது. எல்லாவற்றையும் அறிந்தவனாக இருப்பது இறைவனுக்குரிய மகத்துவம் ஆகும்.''

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தியவர்களின் எண்ணிக்கை தொடர்பாக அறிவிப்புகளில் பல்வேறு விதமாக கூறப்பட்டுள்ளன. சில அறிவிப்புகளில் 3 என்றும் சிலவற்றில் 10, 15, 40 என்றும் கூறப்பட்டுள்ளன.

அவதூறு சுமத்தியவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையைக் குறித்தும் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. அபூதாவூதின் அறிவிப்பில் வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள் இரண்டு ஆண்களுக்கும் ஒரு பெண்ணுக்கும் அவதூறு சுமத்தியதற்காக தண்டனையை அறிவித்து கட்டளையிட்டார்கள். அவர்கள் யார் என்றால், ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் மற்றும் மிஸ்தஹ் பின் உஸாஸா ஆகியோர். நஃபேலி கூறுகிறார்: அந்த பெண் ஹம்னா பின்த் ஜஹ்ஷ் ஆவார்.

அவதூறு சுமத்தியவர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களில் எவருக்கும் கட்டுப்பாடு விதிக்கவில்லை என்று ஒரு கூற்றில் வருகிறது. இன்னொரு கூற்றிலோ பெருமானார் (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல், மிஸ்தஹ் பின் உஸாஸா, ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) மற்றும் ஹம்னா பின்த் ஜஹ்ஷ் ஆகியோருக்கு கட்டுப்பாடுகள் விதித்தார்கள் என்று வருகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரா நூருடைய 36 ஆம் வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகிறார்கள்:

لِكُلِّ امْرِیٍٔ مِّنْهُمْ مَّا اكْتَسَبَ مِنَ الْاِثْمِ

''அவதூறு சுமத்தியவர்கள் எந்த அளவு (பாவத்தை) சம்பாதித்தார்களோ அதே அளவு அவர்களுக்கு தண்டனையும் வழங்கப்பட்டுவிடும்!''

இந்த வசனத்திற்கேற்ப எவர்களெல்லாம் அவதூறு சுமத்தும் சூழ்ச்சியில் பங்கெடுத்தார்களோ அவர்களுக்கு எண்பது எண்பது கசையடிகள் கொடுக்கப்பட்டன.

“ஆனால் அவர்களில் ஒருவன் எல்லோரையும் விட அதிக விஷமியாக இருந்தான்.” அவன் இந்த அனைத்து குழப்பங்களுக்கும் தோற்றுநராக இருந்தான். அதாவது அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல். அவனுக்கு கசையடி கிடைத்தது மட்டுமின்றி இறைவன் சார்பாக அவனுக்கு தண்டனையும் வழங்கப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்விலேயே கடும் பிரயத்தனங்களை மேற்கொண்ட பிறகு அவன் அழிந்து போனான்.

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் ஜெர்மனி மாநாடு தொடர்பாக கூறினார்கள்: கலந்து கொண்டவர்களுள் அந்நியர்கள் அல்லது முதன் முதலாக கலந்து கொண்டவர்கள் பெரும் நேர்மறை தாக்கங்களையும், மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தியுள்ளார்கள். மீடியா மூலமாகவும், செய்திகள் மூலமாகவும் பல மில்லியன் மக்கள் வரை இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் உண்மை போதனை சென்றடைந்துள்ளது. அல்லாஹ் இதற்கு நல்ல மற்றும் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்துவானாக! உண்மையான முறையில் எப்பொழுதும் பயன் பெற்று வரக்கூடிய நல்வாய்ப்பை அஹ்மதிகளுக்கும் வழங்குவானாக!

துஆவின் பக்கமும் கவனம் செலுத்துங்கள்! அல்லாஹ் தனது அருள்கள் மற்றும் கருணைகளின் போர்வையில் எப்பொழுதும் நம்மை போர்த்தி வைப்பானாக!

சூடானுடைய முழு நாட்டின் நிலைமையும் பாதுகாப்பாக இல்லை. அஹ்மதிகளும் தம் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக, அமைதியை விரும்பி சூடானுடைய பல்வேறு பகுதிகளில் பிரிந்து போய் இருக்கிறார்கள். தற்போதும்கூட பல்வேறு பகுதிகளில் இந்த மக்கள் பெரும் நெருக்கடியுடன், ஏழ்மையுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

அல்லாஹ் அஹ்மதிகளின் ஈமானை உறுதிப்படுத்துவானாக. அல்லாஹ் அவர்களின் சூழ்நிலையை மாற்றுவானாக. அந்நாட்டில் பெரும் குழப்பம் பரவியுள்ளது. அல்லாஹ் இந்த குழப்பத்தையும் முடிவுக்கு கொண்டு வருவானாக. அல்லாஹ் அந்த மக்கள் மீது கருணை காட்டுவானாக. அவர்கள் பரஸ்பரம் உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆவார்களாக. ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு சகோதரர் ஆவார் என்ற அடிப்படையில் முஸ்லிம்கள் உரிமையை செலுத்தக்கூடியவர்களாக ஆவார்களாக. இஸ்லாமிய ஆட்சியில் இருக்கக்கூடிய குழப்பங்களை அல்லாஹ் நீக்குவானாக. உண்மையான முறையில் அமைதியுடனும் நிம்மதியுடனும் வாழ்வை கழிக்க கூடிய நல்வாய்ப்பை அஹ்மதிகளுக்கு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)